# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

**අංක 2489/74 - 2026 මැයි මස 22 වැනි සිකුරාදා - 2026.05.22**

2489/74 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு மே மாதம் 22 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**வரைவு**

**2002 ஆம் ஆண்டின் 34ஆம் இலக்க, இலங்கை சிவில் விமான போக்குவரத்து அதிகார சபைச் சட்டம்**

9 ஆம் பிரிவின் கீழான கட்டளை

2002ஆம் ஆண்டின் 34ஆம் இலக்க, இலங்கை சிவில் விமான போக்குவரத்து அதிகார சபைச் சட்டத்தின் பிரிவு 9 இன் கீழ் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் அநுர கருணாதிலக ஆகிய நான், இந்த கட்டளையின் மூலம், மேற்படி சட்டத்தின் பிரிவு 9இன் கீழ் செய்யப்பட்ட, 2017ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 21ஆந் திகதிய 2050/38 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கட்டளையின் அட்டவணையை, அதன் "விமான நிலையங்கள் (இரண்டாம் அட்டவணையில் குறிப்பாக குறிப்பிடப்பட்டுள்ள)" தலைப்பின் கீழ், கீழுள்ளவாறு திருத்துகிறேன்.

01. அதன் "விமான நிலையங்கள் (இரண்டாம் அட்டவணையில் குறிப்பாக குறிப்பிடப்பட்டுள்ள)" என்பதன் கீழ் உள்ள, " 2. இரத்மலானை விமான நிலையம்" என்ற உருப்படிக்கு பதிலாக, பின்வரும் பகுதியை பதிலீடுசெய்வதன் மூலம்:-
" 2. இரத்மலானை விமான நிலையம் பின்வருமாறு அமையும்:-

(i) மேல் மாகாணத்தில், கொழும்பு மாவட்டத்தில் இரத்மலானை பிரதேச செயலகத்தில் கந்தவளை, கிராம அலுவலர் பிரிவு இல.543A இல் அமைந்துள்ள, 2012.12.24 ஆந் திகதி அளவையாளர் அதிபதி அவர்களால் தயாரிக்கப்பட்டு. 2014.08.29 ஆந் திகதி திருத்தம் செய்யப்பட்ட, நில அளவைப்படம் 521001 இல் காட்டப்பட்டுள்ள பகுதி இல. 4 இல் உள்ள 1. 2 3, 4, 5, 6, 7, 8, 9, 12, 13, 14, 15 மற்றும் 16 என்ற நில எண்களாக குறிக்கப்பட்டு பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்ட அனைத்து நிலப்பகுதிகளும், அவற்றில் உள்ள கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்புகளுடன் சேர்ந்து, தொடர்புடைய நிலப்பகுதிகளின் எல்லைகள் மற்றும் பரப்பளவுகளுடன் கீழே குறிப்பிடப்பட்டவாறாகும்:

1A - G 46901 - 33 (2026/05)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

| *தொகுதி இல* | *பரப்பளவு (ஹெக்டயாரில்.)* |
|---|---|
| 1 | 5.4980 |
| 2 | 2.4598 |
| 3 | 40.0873 |
| 4 | 0.0756 |
| 5 | 0.3058 |
| 6 | 1.5860 |
| 7 | 0.7753 |
| 8 | 16.4875 |
| 9 | 21.8904 |
| 12 | 46.4300 |
| 13 | 0.3227 |
| 14 | 0.3389 |
| 15 | 0.3288 |
| 16 | 2.6520 |
| மொத்தம் | 139.2381 |

(ii) மேல் மாகாணத்தில் கொழும்பு மாவட்டத்தில், இரத்மலானை பிரதேச செயலகத்தில் அத்திடிய தெற்கு, கிராம உத்தியோகத்தர் பிரிவு இல. 543B இல் அமைந்துள்ள, 2010.12.30 ஆந் திகதி அளவையாளர் அதிபதி அவர்களால் தயாரிக்கப்பட்ட, நில அளவைப்படம் 521002 இல் காட்டப்பட்டுள்ள பகுதி இல. 10 இல் உள்ள 1 என்ற தொகுதி இலக்கமாக குறிக்கப்பட்டு பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்ட அனைத்து நிலப்பகுதிகளும் அவற்றில் உள்ள கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்புகளுடன் சேர்ந்து தொடர்புடைய நிலப்பகுதிகளின் எல்லைகள் மற்றும் பரப்பளவுகளுடன் கீழே குறிப்பிடப்பட்டவாறாகும்:

| *தொகுதி இல.* | *பரப்பளவு (ஹெக்டயாரில்.)* |
|---|---|
| 1 | 9.6693 |

**அநுர கருணாதிலக**
துறைமுகங்கள் மற்றும் சிவில்
விமான சேவைகள் அமைச்சர்

துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு,
கொழும்பு,
2026, மே 20.

EOG 05 - 0230